பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.*

திரு. மு. ராஜநாயகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, நிறைவேற்றித் தருகிறேன் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 144, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

144—

மீன்பிடித் துறைமுகம்

***7695—திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

TRUTH ALONE TRIUMPHS

2014 ஜூலை 15]

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 2013-2014 ஆம் ஆண்டு, சென்ற நிதிநிலை அறிக்கையிலே மீன் வளத் துறை மானியக் கோரிக்கையின்போது, நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடியில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதாக அறிவிக்கப்பட்டது. மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு விரிவான தொழில்நுட்பப் பொருளாதார சாத்தியக்கூறுகள் மற்றும் மாதிரி வடிவமைப்பு ஆய்வுகள் தற்போது விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மீன்பிடித் துறைமுகக் கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதற்கு இரண்டு கோடி ரூபாயில் தனியாக Corpus Fund ஏற்படுத்தப்பட்டு, அவற்றில் ஒரு கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் விரிவான திட்ட அறிக்கை, அதாவது Detailed Project Report தயாரிப்பதற்கான பணி ஆணை M/s. Indomer Coastal Hydraulics Private Limited நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.

திரு. சு. பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பிட்ட கரங்கள் விலகும் முன்னே வரம் தருபவர், மீனவ மக்களின் பாதுகாவலர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள். தொகுதி மக்கள் சார்பாக எழுப்பிய வினா இந்தப் பேரவைக்கு வரும் முன்னே, பூம்புகார் தொகுதியிலுள்ள தரங்கம்பாடி பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அனுமதி வழங்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதமலருக்குக் கோடானு கோடி நன்றியை என் சார்பாகவும், மீனவ மக்கள் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் சமர்ப்பிப்பதுடன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.